## 22

# ஊக்கமிழந்த நிலைக்கு தேவனுடைய மருந்துக் குறிப்பு

## (11:1-7)

*எபிரெயர் 11ம் அதிகாரம், விசுவாசத்தின் மீது ஒரு மாபெரும் அதிகாரத்தை நமக்குக் கொடுப்பதற்காக மாத்திரமல்ல, ஆனால் விசுவாசம் என்பதே தோற்றகால வாசகர்கள் குறைவுபட்டிருந்த விஷயமாக இருந்தது என்பதால் எழுதப்பட்டது. அந்த வாசகர்கள் ஊக்கம் இழந்து போயிருந்தனர் மற்றும் அவர்கள் விட்டுக்கொடுத்து விடுதலின் விளிம்பில் இருந்தனர். அவர்களுக்கு விசுவாசம் தேவையாக இருந்தது (காண்க 10:38). ஒருவேளை அவர்கள், "நாம் தேவனில் விசுவாசம் கொண்டிருக்கிறோம் - ஆனால் இன்னமும் நாம் இந்தப் பிரச்சனைகள் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறோம்!" என்று நினைத்திருக்கலாம். அது நம்மை 11ம் அதிகாரத்திற்கு கொண்டுவருகிறது, உண்மையான விசுவாசம் என்றால் என்ன என்பதை, ஏவுதல் பெற்ற எழுத்தாளர் இங்கு அவர்களுக்கு (மற்றும் நமக்கு) காண்பித்தார்.*

எபிரெயர் 11ல் நாம், "ஊக்கமிழந்த நிலைக்கு தேவனுடைய மருந்துக் குறிப்பைக்" கொண்டுள்ளோம். இந்த அதிகாரம் விசுவாசம் பற்றிய ஒரு விவரிப்புடன் தொடங்குகிறது. இந்த விரிப்பு, முக்கியமான சத்தியங்கள் பலவற்றை உள்ளடக்குகிறது, ஆனால் இந்தப் பாடத்தில் நாம், உண்மையான விசுவாசமானது நம்மை "காணப்படாதவைகளைக் காண" கூடியவர்களாக்குகிறது என்ற உண்மையின் மீது கவனம் குவிப்போம். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கும் அப்பால் காணும் திறன் கொண்டுள்ளனர் என்று மற்ற வசனப்பகுதிகளும் வலியுறுத்துகின்றன (ரோமர் 1:20; 8:24, 25; 15:21). எபிரெயர் 11ல் நாம், *விசுவாசத்தின்* கண்கள் மூலமாக நம்மால் காண முடியும் என்று கற்றறிகிறோம் (வசனங்கள் 1, 3, 7, 9, 10, 13, 27). காணப்படாதவைகளைக் காணுதல் என்பது பின்வருபவற்றைக் காணும் திறனை உள்ளடக்குகிறது:

- ஆவிக்குரிய விஷயங்களின் உண்மைநிலை மற்றும் இவைகள் உலகப்பிரகாரமான மற்றும் தற்காலிகமான விஷயங்களைக் காட்டிலும் மாபெரும் முக்கியத்துவம் கொண்டுள்ளன என்ற உண்மை.
- நிகழ்வுகள் பற்றி தேவன் ஏவியதால் எழுதப்பட்டவைகளாக இருப்பதால் (நாம் அவை நடந்தபோது அங்கிராவிட்டாலும்) அந்த நிகழ்வுகளின் விபரங்களினுடைய உண்மைத்தன்மை மற்றும், அந்த நிகழ்வுகளில் இருந்து கற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாடங்கள்.
- தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றம் எதிர்காலத்தில் வெகுதொலைவில் இருந்தாலும், அவற்றின் உறுதித்தன்மை.

*விசுவாசமானது காணப்படாதவற்றைக் காணுகிறது என்பது, எல்லாவற்றையும் அறிகிறவரும் பொய்யுரையாதவருமான தேவனால் தரப்பட்ட ஏவுதல் பெற்ற வசனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது!*

## உண்மையான விசுவாசம் விவரிக்கப் படுகிறது (11:1-3, 6)

### *உறுதி மற்றும் அங்கீகாரம் (11:1-3)*

*1ம் வசனத்தில் உள்ள "உறுதி" என்பது "கீழ் நிற்கும் ஒன்று," அதாவது நம்மை (சகிக்கும்) சூழ்நிலைகளில் அல்லது சிரமங்களில் கீழிருந்து தாங்கி நிற்கச் செய்யும் ஒன்று என்று அர்த்தப்படும் hupostasis என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[1] "நிச்சயம்" என்பதற்கான வார்த்தை, "ஆதாரம்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இது சட்டத்தின் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்ட ஒரு சொற்றொடராக இருந்தது. வேதாகம விசுவாசம் என்பது, பார்வையற்ற வகையில், நல்லதே நடக்கும் என்று நம்புதலாகவோ அல்லது உண்டாக்கப்பட்ட "இவ்வாறு நம்புவோமாக" என்ற உணர்வாகவோ இருப்பதில்லை. இது நிச்சயமாக "ஆதாரம் இருந்தாலும் நம்புதல்" அல்ல. மாறாக இது, ஆதாரங்கள் எல்லாவற்றுடனும் சீர்பொருத்தமாகிற ஒரு உறுதிப்பாடாகவும் நிச்சயத்தன்மையாகவும் உள்ளது. இது தேவனுடைய நிச்சயமான சாட்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.*

*2ம் வசனம், "அதினாலே," அதாவது, "இவ்வகையான விசுவாசத்தினாலே" என்று தொடங்குகிறது. ''முன்னோர்கள்'' என்பவர்கள் இந்த சந்தர்ப்பப்பொருளில் கலந்துரையாடப் பட்டுள்ளனர். "நற்சாட்சி பெற்றார்கள்" என்று தரவழைக்கப்பட்டுள்ள martureo என்ற கிரேக்க வார்த்தை, 4ம் வசனத்தில் "சாட்சி ... பெற்றான்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது இம்மனிதர்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றனர் என்பதற்கு அவரது சாட்சியைக் குறிக்கிறது. இவர்கள் உண்மையான விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்தியிருந்ததால் தேவனால் பலன் அளிக்கப் பட்டனர். எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் தோற்றகால வாசகர்கள் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு அவர்களிடத்தில் இவ்வகையான விசுவாசம் இருத்தல் தேவைப்பட்டது, நமக்கும்கூட இது தேவைப்படுகிறது.*

*காணப்படாதவைகளைக் காணக்கூடிய அவ்வகையான விசுவாசத்தின் விவரிப்பு ஒன்றை 3ம் வசனத்தில் நாம் காணுகிறோம். 11ம் அதிகாரம், பழைய ஏற்பாட்டில் முக்கியமான மனிதர்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய ஒரு மேற்கண்ணோட்டத்தைத் தருகிறது. ஆதியாகமம் 1:1ஐத் தவிர வேறு எந்த மிகச்சிறந்த இடத்தில் இருந்து நாம் தொடங்க முடியும்? தேவன் பேசினார் மற்றும் இந்த அண்டம் இருக்கலாயிற்று (ஆதியாகமம் 1; சங்கீதம் 33:6). இதை நாம் எவ்வாறு அறிகிறோம்? அவர் நமக்குக்கூறுகிறார் என்பதே, நாம் இதை அறியும் ஒரே வழியாக உள்ளது. இதை நாம் விசுவாசத்தினால், அவரது வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தினால் அறிகிறோம்.*

*தேவையும் இயல்பும் (11:6)*

6ம் வசனத்தில் உண்மையான விசுவாசத்தின் *தேவை* வலியுறுத்தப் படுகிறது ("கூடாதகாரியம்" மற்றும் "வேண்டும்" என்ற வார்த்தைகளைக் கவனிக்கவும்). மேலும் நாம், உண்மையான விசுவாசத்தின் இயல்புகள் பற்றி அதிகமானவற்றைக் காணுகிறோம்: தேவன் இருக்கிறார் என்றும் அவர் "பலனளிக்கிறவராக" (ஒரு சொந்தமான தேவனாக) இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். "தம்மைத் தேடுகிறவர்களுக்கு" என்ற சொற்றொடரைக் காணாது விட்டுவிடாதீர்கள். KJV மொழிபெயர்ப்பில், "ஜாக்கிரதையாய் தேடுகிறவர்களுக்கு" என்றுள்ளது. தேவனை நாம் *தேட வேண்டும்* என்று, அதாவது அவரது சித்தத்தைக் கற்றுக்கொள்ளவும் அதன்படி செய்யவும் நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அந்த சிந்தனை இந்த முதன்மை வலியுறுத்தத்திற்கான ஒரு நல்ல முகவுரையாக உள்ளது.

## உண்மையான விசுவாசம் செயல்விளக்கப் படுத்தப்படுகிறது (11:4, 5, 7)

*நான்கு ஆய்வுக் கருத்துக்கள்*

இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி, உண்மையான விசுவாசத்தைச் செயல்விளக்கப்படுத்திய பழைய ஏற்பாட்டு உதாரணங்களால் நிரப்பப் பட்டுள்ளது. விவரிப்புகளின் விபரங்கள் மாறுபடுகின்றன, ஆனால் நான்கு ஆய்வுக்கருத்துக்கள் மீண்டும் மீண்டும் உரைக்கப்படுகின்றன அல்லது மறைமுகமாக உணர்த்தப் படுகின்றன. (1) தேவன் யாரேனும் ஒருவரிடம் பேசினார். தேவன் கூறியது நம்ப இயலாததாக அல்லது வினோதமானதாக இருந்திருக்கலாம், ஆனால் அதை அவர் கூறினார் என்பது அதை உண்மையாக்கிற்று. (2) தேவன் யாரிடத்தில் பேசினாரோ அவர்கள் - தங்கள் சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் - தேவன் கூறியதை விசுவாசித்தனர் மற்றும் தேவன் மீது நம்பிக்கை வைத்தனர். (3) அந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவர் செய்யும்படி தேவன் கூறியவற்றை - விளைவுகளைப் பொருட்படுத்தாமல் - செய்தார். அவர் தமது வாழ்வைத் தேவனிடத்தில் ஒப்புவித்தார். (4) அவர் தேவனைப் பிரியப்படுத்தினார் மற்றும் அவருக்குத் தேவன் பலன் அளித்தார்.

*அந்த ஆய்வுக்கருத்துக்களின் மூன்று உதாரணங்கள்*

முதல் மூன்று உதாரணங்களைக் கொண்டு அந்த நான்கு ஆய்வுக்கருத்துக்களை விவரிப்பதற்கு என்னை அனுமதியுங்கள். 4ம் வசனம் ஆபேலைப் பற்றிக் கூறுகிறது (காண்க ஆதியாகமம் 4:2-5). (1) காயினும் ஆபேலும் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் அவர்களிடம் கூறினார் (இதை நாம் "அவசியமான உய்த்துணருதல்" மூலம் அறிகிறோம்). (2) ஆபேல் தேவனை விசுவாசித்தார்; காயீன் அவ்வாறு விசுவாசிக்கவில்லை. (3) ஆபேல் தேவனுக்குக் கீழ்ப்படிந்த வேளையில், காயீன் அவ்வாறு கீழ்ப்படியவில்லை (ஆதியாகமம் 4:7; 1 யோவான் 3:12). (4) ஆபேல் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால், அவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டார் (11:39; மத்தேயு 23:35ஐக் கவனிக்கவும்).

5ம் வசனத்தில் ஏனோக்கின் உதாரணம் உள்ளது (ஆதியாகமம் 5:21-24). (1) தேவன் ஏனோக்கிடம் பேசினார் (இது எபிரெயர் 1:1, 2ல் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது). (2) ஏனோக்கு தேவனை விசுவாசித்தார்: அவர் "விசுவாசத்திலே" நடந்தார். (3) அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்: அவர் "விசுவாசத்திலே" நடந்தார். "நடந்தார்" என்பது வாழ்வுமுறையைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஏனோக்கு "தேவனுடன் நடக்கும்" வாழ்வு நடையை மூன்றரை நூற்றாண்டு காலம் வாழ்ந்தார். (4) ஆகையால் அவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டார். செப்துவஜிந்த் (LXX) மொழிபெயர்ப்பில் ஆதியாகமம் 5:24ம் வசனம், ஏனோக்கு தேவனைப் *பிரியப்படுத்தினார்* என்று கூறுகிறது. பல ஆண்டுகளுக்குப் பின்பு வாழ்ந்த எலியாவைப் போல அவர் மரணம் அடையாமல் தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்டார்.

நோவா, நாம் கவனிக்கும் மூன்றாவது உதாரணமாக இருக்கிறார் (வசனம் 7; ஆதியாகமம் 6-9). (1) தேவன் நோவாவிடம் பேசினார். அவர் "தேவனால் எச்சரிக்கப் பட்டவராக" இருந்தார். வெள்ளப்பெருக்கு பற்றிய எச்சரிப்பானது அந்தக் காலம் வரையிலும் இருந்த மனித அனுபவம் யாவற்றிற்கும் நேர்மாறானதாக இருந்தது, மற்றும் அது அந்த உண்மையான நிகழ்விற்கு நூற்றிருபது ஆண்டுகாலம் முன்னதாக வந்தது. (2) நோவா தேவனை விசுவாசித்தார்: "விசுவாசத்தினாலே ..." அந்த எச்சரிக்கை எந்த அளவுக்குத் தர்க்கப்பொருத்தமாக ஒலித்தது என்பது நோவாவுக்கு எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை. தேவன் அதைக் கூறினார், மற்றும் அது அவ்வாறே ஆக்கப்பட்டிருந்தது! (3) அவர் தமது சொந்த விலையெதையும் பொருட்படுத்தாமல் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். (4) அவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டார். அவரது குடும்பம் காப்பாற்றப்பட்டது, மற்றும் அவர் "விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானார்" (11:7). அவர் விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைச் சுதந்தரித்துக் கொண்டார்.

## முடிவுரை

அடுத்த முறை நீங்கள் ஊக்கம் இழந்து போகும்போது, "ஊக்கமிழந்த நிலைக்கு தேவனுடைய மருந்துக் குறிப்பு" பற்றி நினைத்துக் கொள்ளுங்கள். (1) தேவன் கூறவிருப்பதைக் கவனியுங்கள். உங்கள் வேதாகமத்தை வாசியுங்கள். அவரது வார்த்தை போதிக்கப் படும்போது அல்லது பிரசங்கிக்கப் படும்போது, கவனியுங்கள், உண்மையிலேயே கவனியுங்கள். (2) தேவனை விசுவாசியுங்கள். தேவன் தமது வார்த்தையில் ஒரு கூற்றை ஏற்படுத்தியிருந்தால், அது சரியானதாக மற்றும் நிச்சயமானதாக உள்ளது. அதற்கு நீங்கள் உங்கள் வாழ்வையும் உங்கள் நித்திய ஆத்துமாவையும் ஒப்புவிக்க முடியும்! (3) விளைவுகள் எவ்வாறு இருப்பினும், தேவன் கூறுவதைச் செய்யுங்கள். விட்டுவிடாதீர்கள். (4) நீங்கள் நம்பிக்கை வைத்து கீழ்ப்படிந்தால், நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப் படுவீர்கள் மற்றும் தேவனால் பலன் அளிக்கப் படுவீர்கள்!

ஊக்கம் இழந்துபோன நிலைக்கான இந்த மருந்துக் குறிப்பானது சிலருக்கு மிக எளியதாக ஒலிக்கலாம், ஆனால் அது வேலை செய்கிறது என்பதைக் காண்பிப்பதற்கு, நானூறு ஆண்டுகளின் உதாரணங்களை எபிரெயர் 11ம் அதிகாரம் ஆய்வு செய்கிறது. சிலுவையின் இந்தப் புறத்தில் வாழும் நாம்,

இன்னொரு இரண்டாயிரம் ஆண்டுகளின் உதாரணங்களைத் தர முடியும்.

---

குறிப்பு

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 120-21.